செய்திவெளியீடு எண்.43/2017 நாள் :15.06.2017

அம்பத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட பணிமனை–79 முதல் 82 மற்றும் 85 பகுதிகளில் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் ராம்நகர், லெனின்நகர், விநாயகபுரம், விஜயலட்சுமிபுரம், கிருஷ்ணாபுரம், வெங்கடாபுரம், சோழபுரம், ஞானமூர்த்தி நகர், ஈ.பி.காலனி, மேனாம்பேடு, ஒரகடம், புதூர், பானுநகர், கள்ளிக்குப்பம், வரதராஜபுரம், ராமாபுரம், சம்தாரியாநகர், காமராஜபுரம் மற்றும் டீச்சர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் முடிவடைந்துள்ளது.

ஆகவே, வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு 17–06–2017 அன்று காலை 10.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை சென்னை–53, எண் 162எ, அம்பத்தூர்–ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ள அருள்ஜோதி திருமண மண்டபத்தில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் இந்த வசதியை பயன்படுத்தி கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பிற்கான தொகையை வரைவுக் காசோலையாக (Demand Draft / in favour of CMWSSB) சென்னைக் குடிநீர் வாரிய சிறப்பு முகாமிலேயே செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கழிவுநீர் இணைப்பு 17–06–2017–ஆம் தேதியே வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்